# வனம், நீர் நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை

## தலைமை செயலர் அறிக்கை அளிக்க உத்தரவு

**சென்னை, செப். 9–**

நீர் நிலைகள், வனங்கள், இயற்கை வளங்களை பாதுகாக்க, அரசு தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, அறிக்கை தாக்கல் செய்ய தலைமைச் செயலருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அறப்போர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜெயராம் வெங்கடேசன் தாக்கல் செய்த மனுவில், 'சென்னையை அடுத்த செம்மஞ்சேரி தாமரைக்கேணி நீர் நிலையில், புதிதாக போலீஸ் நிலையம் கட்ட தடை விதிக்க வேண்டும். நீர் நிலையை பழைய நிலைக்கு மாற்ற வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

மனுவை விசாரித்த, தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி தலைமையிலான அமர்வு, புதிய போலீஸ் நிலையம் கட்டுமானத்துக்கு தடை விதித்தது. ஏரி பகுதி குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, ஐ.ஐ.டி., பேராசிரியர்கள் தலைமையில் குழுவையும் அமைத்தது.

இதையடுத்து, குழு ஆய்வு செய்து அளித்த அறிக்கையில், 'நீர் நிலையில் தான் போலீஸ் நிலையம் கட்டப்பட்டுள்ளது; அதை இடித்து விட்டால் மட்டும் பெரிய மாற்றம் ஏற்பட்டு விடாது. அங்கு, ஏராளமான ஆக்கிரமிப்பு கட்டடங்கள் உள்ளன' என, கூறப்பட்டது.

இ வ் வ ழ க் கு , தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, நீதிபதி ஆதிகேசவலு அடங்கிய முதல் பெஞ்ச் முன், நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், அரசு பிளீடர் முத்துகுமார் ஆஜரானார்.

முதல் பெஞ்ச் பிறப்பித்த உத்தரவு:

கொரோனா ஊரடங்கு நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு விட்டதால், ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சட்டப்படி, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



நீர் நிலைகள், ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். நிலத்தடி நீருக்கு ஆதாரமாக, நீர் நிலைகள் உள்ளன.

நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை, அதிகாரிகள் கண்டும் காணாமல் உள்ளனர். நீர் நிலைகள், வனங்களை பாதுகாக்க, அதிகாரிகள் கடும் முயற்சிகள் எடுப்பதில்லை. ஆக்கிரமிப்புகளை அகற்ற, சட்ட நடைமுறையை பின்பற்றுவதில்லை. அதனால், நீதிமன்றத்தை அணுகி தடை உத்தரவு பெறுகின்றனர்.

வீட்டு வசதி திட்டம் போன்றவற்றை செயல்படுத்த வேண்டும்; அதற்காக, வளர்ச்சி திட்டம் என்ற பெயரில், நீர் நிலைகள், காடுகளை அழித்து தான் மேற்கொள்ள வேண்டும் என்பது அல்ல.

எனவே, நீர் நிலைகள், வனங்கள், இயற்கை வளங்களை பாதுகாக்க, அரசு தரப்பில் எடுக்கப்பட்ட நியாயமான நடவடிக்கைகள் குறித்து, தலைமைச் செயலர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

எதிர்கால சந்ததியினர் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருக்க வேண்டும். நீர் நிலைகள் பழைய நிலைக்கு வந்தால் தான், பயனுள்ளதாக இருக்கும். சென்னையில் மட்டும் 950 நீர் நிலைகள் இருந்ததாக கூறுகின்றனர்.

அதிகாரிகளின் செயல்பாட்டில் நாங்கள் குறுக்கிடவில்லை. உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். நோய் தொற்று, மழை வெள்ளம் நமக்கு பாடம் கற்பித்துள்ளது.

இவ்வாறு, முதல் பெஞ்ச் உத்தரவிட்டுள்ளது.